මැතිවරණ දෙපාර්තමේන්තුව
தேர்தல்கள் திணைக்களம்

පොදු කාර්යාලය - 2868441-3
பொது அலுவலகம்

මැතිවරණ කොමසාරිස් - 2868444
தேர்தல்கள் ஆணையாளர்
ෆැක්ස් பெக்ஸ் 2868445

අතිරේක කොමසාරිස් 2868447
மேலதிக ஆணையாளர்

ෆැක්ස් (பெக்ஸ்) 2868368

මැතිවරණ මහලේකම් කාර්යාලය,
තැ.පෙ. 2,
රාජගිරිය. 10107
தேர்தல்கள் செயலகம்,
த. பெ. 2,
இராஜகிரிய. 10107

මගේ අංකය :
எனது இல : LAE/11/04

ඔබේ අංකය :
உமது இல :

දිනය :
திகதி : 2011.01.13

பதிவுத் தபால்

சனபதிபதியின் செயலாளர்,
அமைச்சரவைச் செயலாளர்,
பிரதம மந்திரியின் செயலாளர்,
அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
தேசிய பொலீஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து மாகாணங்களினதும் ஆளுநர்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2011
## அரசாங்க மற்றும் அரச கூட்டுத்தாபனங்களும் உரிய ஆதனங்களை தேர்தல் கால எல்லைக்குள் பயன்படுத்தல்

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் 301 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் நடாத்தப்பட்டதோடு, அவற்றிற்கான வேட்புமனுக் கோருகின்ற அறிவித்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் 2011 சனவரி மாதம் 06 ஆந்திகதி பகிரங்கப்படுத்தப்பட்டன. அன்று முதல் தேர்தல்கள் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் பகிரங்கப்படுத்தப்படும் வரையிலான காலக்கெடு "தேர்தல காலம்" என 17 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. பதினேழும் அரசியலமைப்புத் திருத்தத்தின் 104 (ஆ) (4) (அ) ஆம் உறுப்புரைக்கிணங்க "தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது அரச கூட்டுத்தாபனத்திற்கு ஏதேனும் அசையாத அல்லது அசையும் ஆதனமொன்று" ஏதேனுமொரு அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை தேர்ந்தெடுப்பதற்கான அல்லது ஊக்குவிப்பதற்கான அல்லது தடுப்பதற்கான நோக்கத்திற்காக ஏதேனுமோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடைசெய்யும் அதிகாரம் தேர்தல்க்ள ஆணைக்குழுவிற்கே அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கோ உரித்தானதாகும். தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை நிறுவப்படாவிடின் இவ்வதிகாரம் சமகால தேர்தல்கள் ஆணையாளரினால் செயல்படுத்துப்பட முடியும்.

03. அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விதிமுறைகளை செயல்படுத்த அரசாங்க சொத்துக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடமையாக்கப்பட்டுள்ளனர். தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள்,

ஜீப்வண்டிகள் ஆகிய வாகனங்கள், மற்றும் ஹெலிகொப்டர்கள் போன்ற வானூர்திகள் ஈடுபடுத்தப்படுவதாக கடந்த தேர்தல்களின் போதும் இத்திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே, அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்கள் ஏதேனுமோர் அரசியல் கட்சிகயின், சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளரொருவரின் அதர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத விதத்தில் தேர்தல்கள் காலக்கெடுவிற்குள் வாகன குழாத்தினரைப் பேணுதல் முனைப்பான கவனத்தோடு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன். அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assiqued Vehicles) அரசிற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் வாடகைக்குப் பெறப்பட்டு கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பனவும் இதில் உள்ளடங்கும் என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.இக்காலக்கெடுவுக்குள் அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assiqued Vehicles) வாகனங்கள் தவிர்ந்த விஷேடமாக குழாங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றிற்கான ஓட்ட அட்டவணைகள் முறையாக பேணப்படல் வேண்டுமென்பதோடு இந்த ஓட்ட அட்டவணைகள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு அந்த வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லையென திருப்தி காணுதல் வேண்டும்.

04. அரச அலுவலகக் கட்டிடங்கள், பாடசாலைகள், அரசிற்குச் சொந்தமான வேறு கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியனவும் அரச வளங்களாகும். ஆதலால் அக்கட்டிடங்கள் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றிற்குப் பயன்படுத்தப்படக்கூடாது. தேர்தல்க்ள பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசிற்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் என்பவற்றை கட்டணமின்றி வழங்குதல் முற்றிலும் தடையென்பது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அரசிற்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் அவை அமையப் பெற்றுள்ள காணிகள் என்பன அரசியல் கட்சிகளதும், வேட்பாளர்களினதும் அரசியல் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பதாகைகள் போன்றவற்றின் காட்சிப்படுத்தலுக்காகப் பயன்படுத்தவும் இடமளிக்கக்கூடாது.

05. தேர்தல் காலப் பகுதிக்குள் அரச நிதியை செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறுவிதத்திலான சேவைகள், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள் என்பன அரசியலோடு தொடர்புபட்ட நபர்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளை, அச்சந்தர்ப்பங்களின் தேர்தலோடு. தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களால் வெளிப்படுத்தப்படக் கூடிய சாத்தியங்களுண்டு. இத்தகைய கருத்து வெளிப்பாடுகள் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மை முறையற்ற விதத்தில் பாதிக்கக்கூடும். மேலும் இத்தகைய விழாக்களை ஒழுங்கமைக்கும் பொறுப்பு அமைச்சுக்களிலும், திணைக்களத்திலும அல்லது மாவட்டங்களிலும் பணியாற்றுகின்ற அரச அலுவலர்களுக்கு சாட்டப்படுவதால் தேர்தல் காலத்தில் பல்வேறு கடமைகள் பொறுப்புவிக்கப்படுகின்ற இவ்வலுவர்கள் இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வது எந்த வகையிலும் பொருத்தமற்ற ஒன்றாகும். ஆதலால் இந்த தேர்தல் காலப்பகுதிக்குள் இத்தகைய விழாக்களை நடாத்துவதைத் தவிர்ந்து கொள்வது சாலப் பொருத்தமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

06. 18 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்துக்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மற்றும் நீதிமன்ற சேவை ஆணைக்குழுவின் நிருவாக எல்லைக்குட்பட்ட விடயங்களுக்கு 17 ஆம் திருத்தத்திலுள்ள மட்டுப்பாடுகள் பொருந்தாது ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழு இதுவரை தாபிக்கப்பட்டாமையினால், அவ்வாணைக்குழுவுக்கு உரித்தான ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என்பன செயல்படுத்தப்படுகின்ற அலுவலர்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட முறைமைகளூடாக விண்ணப்பங்களைக் கோரி பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் என்பன முறையாக நடாத்தப்பட்டு ெளிக்காட்டி நிற்கும் தன்மையுடன் கூடியதாக உரிய முறையில் அத்தகைய ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவி என்பன வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய புதிய ஆட்சேரப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பாக தேர்தல்க்ள் ஆணையாளரை அறிவூட்டியிருத்தல் தேர்தலோடு தொடர்புடைய நீதிமன்றச் செயன்முறைகளில் பதிலளிப்பதற்கு பெரிதும் பயனுடையதாயிருக்கும் வழமையான செயன்முறைக்கு அப்பால் ஏதேனும் ஓர்ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய பிரத்தியேக தேவைப்பாடொன்று ஏற்படின், அத்தகைய சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரை அறிவூட்டி அவரின் இணக்கப்பாட்டோடு அவ்வலுவல்களை மேற்கொள்ளல் மிகப் பொருத்தாமாகும். இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் என்பன தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பூவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் முக்கியமாக ஏதேனும் ஓர் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க செல்வாக்குச் செலுத்தவல்ல ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் அல்லது பதவியுயர்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமலிருக்க நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பாக அனைத்து அலுவர்களும் கவனம் செலுத்துதல் வேண்டும், தேர்தல்கள் ஆணையாளரை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற நீதிமன்ற நடவடிக்கைகளில் அவை தொடர்பான உண்மை நிலைமையை நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டி வருவதால் உரிய நடைமுறையைப் பின்பற்றாமையினைத் தவிர்ந்து கெதள்ளல் மிகப் பொருத்தமான ஒன்றென்பதை அனைவருக்கும் அறிவிக்க விரும்புகின்றேன்.

07. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் இடமாற்றங்களை 2011 சனவரி 17 ஆந் திகதிமுதல் தேர்தல் முடிவடைந்து 02 வாரங்கள் ஆகும்வரை இடைநிறுத்துமாறு ஏற்கனவே என்னால் கோரிக்கை விடப்பட்டுள்ளதோடு, தேர்தல் கடடைகளில் ஈடுபடுத்தப்படாத அல்லது அரசக் கூட்டுத்தாபன அலுவலர்களை தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்கின்ற போது அரசியல் காரணங்களால் அவ்விடமாற்றல்கள்

மேற்கொள்ளப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்காதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொளள்வது பொருத்தமாகும்.

08. இத்தேர்தல்களில் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதை ஊக்குவிக்கக் கூடிய அல்லது தடுக்கக்கூடிய அலுவல்களுக்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கத்தவாறான இத்தடைகளை கடுமையாக அனுமதிக்குமாறு உங்களுக்கு ஆலோசனைகூற விரும்புகின்றேன். மேலும், தங்களின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குமாறு தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

09. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்ய, பாதுகாக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு/ தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்குவது உரிய சட்டங்களை வலுவாக்கம் செய்ய பொறுப்பாக உள்ள அனைத்து அரச அலுவலர்களினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக தங்களது அதிகூடிய கவனம் ஈர்க்கப்படல் வேண்டுமென தெரிவிக்க விரும்புகின்றேன்.

10. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டும் பொறுப்பு அமைச்சின் செயலாளரையே சாரும்.

11. அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக தங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைமை கணக்கு அலுவலர்/ கணக்கு அலுவலர் என்ற வகையிலும் அரசுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தவிர்ப்பதும் உரிய அலுவலர்களின் கடமையொன்று என்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகின்றேன்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

பிரதி :
1. கணக்காளர் நாயகம்- அறிந்துக்கொள்வதற்காக
2. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும்
3. மாவட்ட பிரதி/ சிரேட்ட உதவி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் - அறிந்துக்கொள்வதற்காகவும் உங்களது மாவட்ட அனைத்து பிரதேச செயலாளர் மற்றும் மாநகர முதல்வர்களுக்கும் நகர சபை மற்றும் பிரதேச சபைத் என்பவற்றின் செயலாளர்களுக்கும் கடிதத்தின் பிரதியொன்றை அனுப்பிவைப்பதற்கும். இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கையெடுப்பதற்கு அறிவிக்கப்படுவதற்கும்.